அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 336

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
22 ஜூலை. 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

சிற்றூழியர் சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப் பட்டு சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் அமைந்த சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் அல்லது எழுதுவினைஞர் பணிகளைச் செய்தற்கு அமர்த்தப்பட்டுள்ளவர்கள்.

---

சிற்றூழியர் தரங்களில் நியமிக்கப்பட்டிருந்தாலும் எழுதுவினைஞராக, சுருக்கெழுத்தாளராக அல்லது தட்டெழுத்தாளராக பணி புரிதற்கு உங்கள் திணைக்களத்தில் அல்லது ஒரு திணைக்களமாகக் கருதப்படும் அமைச்சின் அலுவலகத் தில் அமர்த்தப்பட்டிருக்கும் ஆட்கள் ஒவ்வொருவரினதும் பெயர்/பிறந்த திகதி/ நியமன திகதி/கல்வித் தகைமை/நியமனத்தின் தன்மை (அமயமா/ தற்காலிகமா அல்லது நிரந்தரமா என்பது பற்றி) என்னும் விபரங்களைத் தயை கூர்ந்து இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அறியத்தருக.

02. இத் தகவல்களை 15 ஆகஸ்ட் 1986-ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் நன்று.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

ஒப்பம்: மெல்வின் விஜேசேகர.
இணைந்த சேவைகள் பணிப்பாளர்